Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 13 செவ்வாய்க்கிழமை (29- 08- 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 277

# உணவுக் கப்பல்களுக்கு மீண்டும் செஞ்சிலுவை பாதுகாப்பு வழங்கும்

## காவலரண்கள் மீது மன்னார் தீவில் தாக்குதல்

### இராணுவத்தினர் இருவர் பலி

யாழ்ப்பாணம், ஒக. 29

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள மன்னார்த்தீவின் கறிச்சட்டிப்பாலத்தில் அமைந்திருந்த இரு இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை 12.50 மணியளவில் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்ட [6 ஆம் பக்கம் பார்க்க]

## கஞ்சிகுடிச்சாறு பகுதியில் 3 அதிரடிப்படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஒக. 29

அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுடன் நடந்த சண்டையில் பொலிஸ் அதிரடிப் படையினர் மூவர் கொல்லப்பட்டனர்.

காட்டுப் பகுதியில் பொலிஸ் அதிரடிப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நீண்ட நேரம் கடும் சமர் இடம்பெற்றது.

இதேவேளை —

நாவக்கேணி என்னும் இடத்தில் இடம்பெற்ற மற்றொரு மோதலில் படையினர் ஏழு பேர் படுகாயமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ-3]

## அம்பாறை தளபதி உட்பட 4 வேங்கைகள் வீரச்சாவு

அம்பாறை மாவட்டம் லம்பியடிக்குளம் என்ற இடத்தில் நேற்று முன்தினம் அதிரடிப்படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்டத் தளபதி லெப்டினன்ட் கேணல் மாருதியன் (செல்லத்துரை பிரபாகரன் — அம்பாறை) வீரச்சாவடைந்தார்.

அந்த மோதலில் இவருடன் கப்டன் கமால் (கந்தையா செல்வராசா — அம்பாறை), கப்டன் மதனமோகன் அல்லது இறிஸ்ரி (செல்லத்துரை நாகேந்திரன் — அம்பாறை), வீரவேங்கை லிங்கேஸ்வரன் (தில்லையான் சிவராசா — மட்டக்களப்பு ஆகிய மூன்று போராளிகளும் வீரச்சாவடைந்தனர்.

### புலிகளுக்கு வந்த கப்பலில்

## ஸ்ரிங்கர் ஏவுகணைகள் ஒலிகன் ஆயுதங்கள்

விடுதலைப் புலிகளுக்கு சமீபத்தில் வந்த ஆயுதக் கப்பலில் சுவிஸ் தயாரிப்பான ஒலிகன் (Oerlikon) விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள், தரையிலிருந்து வானத்துக்கு ஏவும் "ஸ்ரிங்கர்" ஏவுகணைகள், அதிசக்தி வாய்ந்த வெடி பொருள்கள், தானாக இயங்கும் ஆயுதங்கள், டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் ஆகியவை எடுத்து வரப்பட்டதாக "சண்டே ரைம்ஸ்" வாரஇதழின் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

கப்பல் ஒன்றில் இனம் தெரியாத துறைமுகம் ஒன்றில் இருந்து ஆசிய நாடு ஒன்றின் துறைமுகத்துக்கு இந்த ஆயுதங்கள் முதலில் எடுத்து வரப்பட்டதாகவும் —

பின்னர் இலங்கையின் வடக்கு — கிழக்கு கரையில் இறக்கப்பட்டு வன்னிப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## "லங்கா கல்யாணி" இன்று புறப்படும்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 29

வடக்கே வரும் உணவுக் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மீண்டும் ஆரம்பிக்க உள்ளது.

கடந்த ஒன்றரை மாதகாலமாக இது சம்பந்தமாக நிலவிய முட்டுக்கட்டை நிலை நேற்றுடன் நீங்கியது.

அதனைத் தொடர்ந்து "லங்கா கல்யாணி" கப்பல் 2,200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன் இன்று மாலை கொழும்பிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்படுகிறது.

கடந்த மாதம் 14 ஆம்திகதி பருத்தித்துறை நோக்கி வந்த கப்பலில் இருந்து காங்கேசன் துறையில் வைத்து படையினர் உணவுப் பொருள்களில் ஒரு பகுதியை இறக்கியதைத் தொடர்ந்து —

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதை நிறுத்திக்கொண்டது.

அதன் பின்னர் அரச அதிகாரிகளுக்கும் செஞ்சிலுவை அதிகாரிகளுக்கும் இடையில் கொழும்பில் பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. எனினும் தடங்கல் நிலை தொடர்ந்தது.

ஜூலை 14 ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறையிலிருந்த (5 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் தீர்வு யோசனையால் அரசாங்கம் ஆட்டம் காணும் நிலை!

### சுதந்திரக்கட்சி பிளவுபடும் ஆபத்து!!

கொழும்பு, ஒக. 29

அரசாங்கத்தின் அதிகாரப் பரவல் யோசனைகளால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு உண்டாகி, அரசு ஆட்டம்காணும் நிலை ஒன்று உருவாகி வருவதாக 'சண்டே லீடர்' அரசியல் கட்டுரையில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அரசு வெளியிட்ட யோசனைக்கான திருத்தங்களை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா அறிக்கை வடிவத் (5 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ்-ஜே. ஆர். ஒப்பந்தத்தின் தவறு சந்திரிகாவின் திட்டத்திலும் உண்டு

### டிக்ஸிற் சுட்டிக் காட்டுகிறார்

கொழும்பு, ஒக. 29

பிராந்தியங்களுக்கான நில ஒதுக்கீட்டு விவகாரத்தில் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் நேர்ந்த தவறு சந்திரிகாவின் அரசியல் தீர்வுத் திட்டத்திலும் இடம்பெற்றுள்ளது. மகாவலிகங்கை நிலக் குடியிருப்பு, மற்றும் நீர்ப்பாசனத் திட்டம் மத்திய அரசின் நியாயாதிக்கத்தினுள் வருகின்றன. இது தமிழர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்புடையது அல்ல.

முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலரும் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பப்பட்ட போது இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த வருமான ஜே. என் டிக்ஸிற் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ள வடக்கு–கிழக்கு மாகாணத்தின் எல்லைகள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு மீள நிர்ணயம் செய்யப்படும் என்ற ஒரு சரத்து உத்தேச திட்டத்தில் காணப்படுகிறது.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர்களின் பிரச்சினையில் ஐ. நாவை தலையிடக் கோருவேன்

### யாழ். வந்த அதிகாரி உதயனுக்குப் பேட்டி

யாழ்ப்பாணம், ஒக. 29

"மிகவும் கஷ்டங்கள் நிறைந்த நெருக்கடியான நிலையில் வாழும் யாழ். குடாநாட்டு மக்களின் விடயத்தில் தலையிட்டு உதவுமாறு ஐ நாவுக்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் கேட்கவிருக்கிறேன்."

இப்படிக் கூறினார் யாழ். வந்திருந்த ஐ.நா. அபிவிருத்தி திட்ட மனிதாபிமான விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆலோசகரும், இணைப்பதிகாரியுமான திரு. றோலண்ட் ஹட்சன்.

தனது யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று கொழும்பு திரும்புமுன் (6 ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்களே உங்களுக்காக

# புதிய பிரிவுகள்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

By: **BITTO**

**O/L LITERATURE**

**S. PATTRICK**

**சிங்களம்**

E. S. பியதாஸ

அனைத்து வகுப்புகளும்

ஆரம்பம்: **2 - 9 - 1995**

## எஸ். ரி. கல்வி நிறுவனம்

46, (105) 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[38262]



## SPECIAL ENGLISH COURSE

(விசேட ஆங்கில மொழிக் கற்கை நெறி)

* A/L பரீட்சை எடுத்தவர்கள்
* உயர்கல்வி மாணவர்கள்
* அரச, வங்கி பணியாளர்கள்
* ஆசிரியர்கள்

ஆகியோருக்குப் பயனுள்ள இலக்கண, இலக்கிய மயமான பாடத்திட்டத்திற்கமைவானது

ஆசிரியர்:

**த. ந. பஞ்சாட்சரம்**

ஆரம்பம்; **31 - 08 - 1995**

மு. ப. 10-00மணி

மேலதிக விபரங்களுக்கு:

நிர்வாகி,

## புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்

கன்னாதிட்டி: யாழ்ப்பாணம்.

(வி/2623)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 26 — 08 — 1941

மறைவு: 09 — 09 — 1994

## Dr. கந்தவனம் வேலாயுதம்பிள்ளை

நந்தா விளக்கனைய நாயகனே
நம் நிதியே நாவிலத்திற்
சிந்தாகுல மானவை தீர்த்தவரே எம்
செந்திருவே - உயர்வித்
தந்தாய் நினையே தயையின் இறையே
தரணியில் நாம்
சந்தோசமும் பாக் (கி)யமும் சேர்ந்திடல் -
காணா (து)
சென்றனையோ!

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

நுணாவிலயடி,
கொலிகண்டி.

(38258)

## நவக்கிரியில் இளைஞர் மீது சூடு!

யாழ்ப்பாணம், ஓக. 29

புத்தூர் நவக்கிரிப் பகுதியில் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

பலாலி முகாமை அண்டிய காவலரணில் இருந்து படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினாலேயே அவர் காயமடைந்தார்.

வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து உடுவிலில் வசிக்கும் செல்வர் உதயகுமார் (வயது 21) என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

(ஐ-15)

## விடைத்தாள்கள் சென்றன

யாழ்ப்பாணம், ஓக. 29

கடந்த வாரம் முடிவடைந்த ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்கள் நேற்று 'ஹபரண' கப்பல் மூலம் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

வெளியூருக்கான ஒரு தொகுதி தபால் பொதிகளும் இக்கப்பலில் எடுத்துச் செல்லப்பட்டன.

[ஐ-3]

## பாம்பு கடித்து 6 பேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஓக. 29

குடாநாட்டில் பாம்புக் கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது

பாம்பினால் கடியுண்ட ஆறுபேர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் கொடிகாமம், சாவகச்சேரி, புத்தூர் ஆகிய இடங்களை சேர்ந்தவர்களாவர்.

தற்போது நிலவும் வெப்பமான காலநிலையால் பாம்புகள் குடிமனைப் பகுதிகளுக்குள் வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[ஐ-13)

## கரணவாய் வாசிகள் இருவர் ரூ. 1 லட்சம் உதவி

வடமராட்சி, ஓக 29

தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு கரணவாயைச் சேர்ந்த இருவர் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் அன்பளிப்புச் செய்தனர்.

கரணவாய் செம்பாட்டைச் சேர்ந்த சின்னையா பாலசிங்கம், அண்ணா சிலையடியைச் சேர்ந்த சின்னட்டி கந்தக்குட்டி ஆகியோர் கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் கடந்த புதன் இரவு நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் திரு. தமிழேந்தியிடம் கையளித்தனர்.

(ஓ-173)

## கலந்துரையாடல்

வலி. மேற்கு பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களுக்குமான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது. சகலரையும் அதில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா தெரிவித்துள்ளார்.

(ஐ-175)

## மண்டைதீவு ஷெல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 29

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ். நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

[ஐ-15-51]

உ
சிவமயம்

குரு அருள் பெற்று குவலயம் வாழ்க

## "வித்தகம்"

பெரிய மாவடி, சாவகச்சேரி

லலிதா ஸஹஸ்ரநாம இலக்ஷ அர்ச்சனை நிறைவும்

## சக்தி மகா வேள்வி விழாவும்

17 - 07 - 1995 முதல் 45 நாட்களாக நடைபெறும் லலிதா ஸஹஸ்ர நாம இலக்ஷார்ச்சனை நிறைவு தினமான 30 - 08 - 95 புதன்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் மகா சக்தி வேள்வி நடைபெறும்.

தமிழினம் படும் இன்னல்கள் தீரவும், சமாதானம் சாந்தியுடன் எங்களினம் ஓங்கி உயர்வு பெறவும், அஞ்சலி பூர்வமாக நடக்கும் இந்த ஆராதனையிலும் பிரார்த்தனையிலும் இடம்பெயர்ந்து அல்லல் உறுகின்ற அந்தணப் பெருமக்கள் உட்பட அனைத்து அன்பர்களும் பங்கு கொண்டு பயன் பெற வேண்டுகின்றோம்.

அன்புடன்
வித்தகச் செல்வர்கள்

[38270]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### கடற்புலி கப்டன் தாயகி

செல்வி மகாலிங்கம் ரஞ்சினிதேவி

வேலணை மேற்கு. வேலணை

தாயின் மடியில்: **26 — 10 — 1970**

தாயக விடிவிற்காய்: **16 — 07 — 1995**

இன்று (29 - 08 - 1995) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி நிகழ்வுகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள். அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் காங்கேசன்துறைமுகத்தில் தரித்து நின்ற "எடித்தரா கட்டளைக் கப்பல் தகர்ப்பு தாக்குதலின் போது இவருடன் வீரச்சாவை தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அலைகளை காணிக்கையாக்குகின்றோம்.

நன்றி!

— குடும்பத்தினர்.

80/7 பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

[38239]

உ

கொக்குவில் மேற்கு சித்திவிநாயக (ஐயனார்) ஆலய

## ஆவணி சதுர்த்தி விழா

இன்று 29-8-1995

பகல் 1008 சங்காபிஷேகமும்

இரவு சித்திவிநாயகரின் வீதி உலா முடிந்ததும்

இரவு 8-15 மணிக்கு

தெய்வீகப் பேருரை

பொருள்: "பட்டினத்தார்"

நிகழ்த்துபவர் தமிழருவி

திரு. த. சிவகுமாரன் (B. A. Hons)

(அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம் ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி)

— உபயகாரர்

(38263)



## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருடம் ஆவணி மாதம் 15 ஆம் நாள் (31 - 08 - 1995) வியாழக்கிழமை காலை 7-16 மணி தொடக்கம் 8-52 மணி வரையுமுள்ள சுபவேளையில்,

| | |
|---|---|
| எனது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி திருநிறை செல்வி |
| **சிவகுமார்** | **சுரேந்தினி** |
| (சிவம் படப்பிடிப்புக் கலையகம், சுன்னாகம்) அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இளங்கலைஞர் மன்றமண்டபத்தில் நடைபெறும் மங்கல நாண் பூட்டும் மணவினைத்திருநாளில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்:

மணமகளில்லம் 01 - 09 - 1995 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணி

★ தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
|---|---|
| திருமதி ச. பாலசுப்பிரமணியம், கணேசா வித்தியாசாலை அருகில், ஊரெழு மேற்கு. | திரு. திருமதி வி. ஜெகதீசன், பாரதி வீதி, மானிப்பாய். |

[8710]


★ புலிகளைப் புறக்கணிப்பது

# சமாதானத்தில் அக்கறை இல்லாத நிலைப்பாடு என்கிறார் தொண்டமான்

கொழும்பு, ஓக. 29

"கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் நிராகரிக்கப்பட்டதுடன், ஏமாற்றப்பட்டுள்ளமையும் வரலாறு. தமிழர்களின் உரிமைகளைப் பெறவும் அதன் மூலம் உண்மையான ஜனநாயகத்தை நிலை நாட்டவுமே விடுதலைப்புலிகள் போராடி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் கோரிக்கைகள் நியாயமானவை; சமாதான முயற்சிகளின் போது புலிகளைப் புறக்கணிப்பது சமாதானத்தில் அக்கறையில்லாத நிலைப்பாடே."

அரசு முன் வைத்துள்ள தீர்வு யோசனைகள் பற்றி திரு தொண்டமான் 'வீரகேசரிக்கு' அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவரது பேட்டியின் சில அம்சங்கள் வருமாறு:

கேள்வி: ஐ. தே. க. இந்த யோசனைகளை எதிர்ப்பது பற்றிஎன்ன நினைக்கிறீர்கள்?

பதில்: அவர்கள் இதன் மூலம் அரசியல் லாபம் தேடப் பார்க்கிறார்கள்.

கேள்வி: அதிகாரப் பரவலாக்கலின் போது மலையக மக்களின் நிலை எப்படி அமையவேண்டும்?

பதில்: ஏனைய சமுதாயங்களுக்கும், பிராந்திய மக்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது போல மலையக மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் அவர்களும் பல நூற்றாண்டுகளுக்கு மேலாக இங்கு வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கென ஒரு தனியான நிருவாக அலகு ஏற்படுத்தப்படவேண்டும்.

கேள்வி: வடக்கு - கிழக்கு மாகாண அதிகாரம் ஐந்து வருடங்களுக்கு புலிகளிடம் விடப்பட வேண்டும் என்று கூறியிருந்தீர்கள். அதற்கான காரணம் என்ன?

பதில்: அதிகாரப் பகிர்வு வழங்கப்படும்போது வடக்கு-கிழக்கில் அதனை அமுல் படுத்தக்கூடிய சக்தி புலிகளிடமே உள்ளது. அதற்கான வசதிகளையும் அவர்கள் கொண்டுள்ளனர். அப்பிரதேச மக்களின் ஆதரவும் அவர்களுக்கு உண்டு.

ஆகவே அவர்களிடம் 5 வருடங்களுக்கு அப்பிரதேசம் விடப்பட்டு வழங்கப்பட்ட அதிகாரங்கள் செயற்படுத்தப் படும்போதுதான் அதன் பலா பலன்களை பொதுமக்கள் நன்கு முழுமையாக உணருவார்கள். அதன்மூலமே இந்தத் தீர்வுத் திட்டத்திற்கான இறுதி வெற்றி கிடைக்க வாய்ப்பு உண்டு.

கேள்வி: அப்படியானால் அரசாங்கம் புலிகளை மீண்டும் பேச்சுக்கு அழைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

பதில்: பேச்சுவார்த்தை முறிவுக்கு இரு தரப்பினருமே காரணமாகும். ஆகவே இது விடயத்தில் இரு தரப்பினருக்குமே பொறுப்புஉண்டு (ஓ)

## புலிகளின் குரல் வானொலியில்

29 - 08 - 1995

செவ்வாய் இரவு

- ★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள்
- ★ 8-20 — நலந்தானா நிகழ்ச்சியில் கூகைக்கட்டு நோய் பற்றிய சில வைத்திய குறிப்புகள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

30 - 08 - 1995

புதன் காலை

- ★ 7-02 — காவிரணைக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள், நீங்கள் கேட்டவை

## தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை

- ★ 5-01—சிந்தனைச்சிதறல்
- ★ 5-08 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — என் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — இவ்வாரம் இவர்

வெளிநாடு செல்லாதீர் என்ற

## ஜனாதிபதி பணிப்புரையை மீறினார் தொண்டா!

கொழும்பு, ஓக. 29

அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதி சந்திரிகாவின் பணிப்புரையை மீறி நாட்டை விட்டு வெளியே சென்றுள்ளார் என்று அறிய வருகிறது.

பொதுமக்கள் முன்னணியின் அமைச்சர், எம்.பி., அல்லது மாகாணசபை உறுப்பினர் எவரும் நாட்டை விட்டு வெளியே செல்வதற்கு முன் தனது அனுமதியைப் பெறவேண்டும் என்று ஜனாதிபதி ஏற்கனவே பணிப்புரை வழங்கியுள்ளார்.

கடந்த வாரம் இந்தியாவுக்குச் சென்ற அமைச்சர் தொண்டமான் தனது பயணம் பற்றி எழுத்து மூலம் ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார்.

ஆனால், இந்தக் கட்டத்தில் அமைச்சர் நாட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது என்று ஜனாதிபதியின் செயலாளரான கே. பாலபட்டபெண்டி எழுத்து மூலம் அமைச்சர் தொண்டமானுக்கு அறிவித்துள்ளதாக அறிய வருகிறது. (ஓ-க)

## பலாலிமுகாமுக்கு சுரங்கம் தோண்டுகிறார்கள் புலிகள்

### சண்டே லீடரில் செய்தி

கொழும்பு, ஓக. 29

பலாலி இராணுவ முகாமுக்குள் செல்ல விடுதலைப் புலிகள் இரண்டரை மைல் நீள சுரங்கம் ஒன்றைத் தோண்டிக் கொண்டிருப்பதாக "சண்டே லீடர்" செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

அச்சுவேலியிலும் இது போன்ற இன்னொரு சுரங்கத்தை விடுதலைப் புலிகள் தோண்டுகிறார்கள் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் இச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-க)

தீர்வு யோசனையை வாபஸ் பெறுக!

## 100 பௌத்த குருமார்கள் ஜனாதிபதிக்கு மகஜர்!

கொழும்பு, ஓக. 29

அண்மையில் வெளியாகிய அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனைகள் உடனடியாக வாபஸ்பெறப்பட வேண்டும் என்று கோரும் மனு ஒன்றை நூறு பௌத்த குருமார் கையெழுத்திட்டு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ளார்கள்.

இந்தப் பிரேரணைகளால் தமிழ் ஈழம் மட்டும் அல்ல, மலை நாட்டுத் தமிழர்களுக்கு ஒரு 'மலை நாடும்' கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்கு ஒரு 'கலிஸ்தா' னும் உருவாகும் என்று இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.


உ

தர்மசாஸ்தா சஹாயம்

கன்யாதான, மாங்கல்யதாரண. பாணிக்கிரகண

## சுபமுகூர்த்த அழைப்பு

சுபமுகூர்த்த நேரம்:

30 - 08 - 95 புதன்கிழமை காலை 9மணி முதல் 11 மணி வரை

சுபமுகூர்த்தம் நடைபெறும் இடம்:

இளங்கலைஞர் மண்டபம் - நல்லூர்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் ஜ்யேஷ்டகுமாரன் | கரணவாய் கிழக்கு சிவஸ்ரீ ச. இராமநாதக்குருக்கள் |
| சிரஞ்சீவி பிரம்மஸ்ரீ | த்விதீயகுமாரி |
| **தாணுநாதசர்மா** | **சௌ. ரமாதேவி** |

ஷ. முகூர்த்தத்தை குடும்ப சமேதராய் நேரில் வந்திருந்து நடத்தி தருமாறு கலைஞர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

✶ தனிப்பட்ட அழைப்பு இல்லை ✶

புதன்கிழமை மாலையும், வியாழக்கிழமையும் மணமகனில்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

வெள்ளி காலை மணமகளில்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

இங்ஙனம்:

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்,
தர்மசாஸ்தா குருகுலம்,
இணுவில்.

[38256]

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரும்புக் கதிரைகள், தகரப் பந்தல், கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு. தி. கிருஷ்ணராசா, இல:190, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (38216)

பத்து அடி நீளமும், ஐந்து அடி அகலமும், மூன்று அடி உயரமும் வேம்பினாலான மூன்று மூடை மாவு வேலை செய்யக்கூடிய வெதுப்பகத்துக்குரிய மேசை விற்பனைக்கு உண்டு. பிற்பகல் 2-00 முதல் மாலை 6-00 வரை பார்வையிடலாம். த பெனின்சுலா குறூப் [அரஸ்கோ], இல.163, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். [38264]

## தேவை

புதிய, பழைய பாவனைக்கு உதவாத தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R. மருதலிங்கம், இல. 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [38247]

## புலமைப் பரிசில்

பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் எம்மால் வெளியிடப்படுகின்றன. எமது பயிற்சிகள் மூலம் உங்கள் பிள்ளைகளை பரீட்சையில் வெற்றி பெறச் செய்யுங்கள். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8646)

## றோணியோ, தட்டச்சு

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகள் சிறப்பாகச் செய்து தரப்படும். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8647]

## மிருதங்கம்

மிருதங்கம், தபேலா விற்பனைக்குண்டு. எமது வேலைகள் தமிழீழ கலைஞர்களின் பாராட்டுக்குரிய தரம் வாய்ந்தவையே ஒரு மிருதங்கம் முழுவேலை 1600/-. எந்த மாற்றமும் இல்லை. ச. இந்திரன், மிருதங்க தொழிலகம், புதிய பண் நிலயம், யாழ்ப்பாணம். [38239]

## SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature கற்பிக்கப்படும். மொழிபெயர்ப்புகளும் செய்யப்படும். V. N Kandasamy A I. B. Part-I (London) Inter (London) Dip-in-English இல. 87, திருநெல்வேலி றோட் [ரயில் கடவைக்குச் சமீபமாக], கொக்குவில். [38259]

## கரப்பந்தாட்ட கழகங்களுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 29

யாழ். மாவட்டத்தில் இது வரை பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத சகல கரப்பந்தாட்ட கழகங்களும் வலய ரீதியாக மீண்டும் பதிவு செய்யப்படவுள்ளன.

சகல கழகங்களும் புதிய விண்ணப்பப் படிவத்தை வலய கரப்பந்தாட்ட சங்கச் செயலாளர்களிடம் இருந்து பெற்று தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழுகேட்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும். பதிவு செய்யாத கழகங்கள் சுற்றுப் போட்டிகளை நடத்தவோ அல்லது அவற்றில் பங்குபற்றவோ அனுமதிவழங்கப்படமாட்டாது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

---

மகளிருக்கான

# மனைப் பொருளியலும் கைத்திறனும்

## டிப்ளோமா பயிற்சி

* கேக் ஐஸிங் * உணவு தயாரித்தல்
* உடை தயாரித்தல்
* கை வேலை * பூ வேலை

- மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவச கூந்தல் அலங்காரம், இந்து கிறிஸ்தவ மணப் பெண் ஒப்பனை அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.
- பயிற்சிக் காலம் 6 மாதங்கள்
- பயிற்சி முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் வகுப்புகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் நடைபெறும்.

**ஆரம்பம்: 04 - 09 - 1995**

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம்: 10 - 09 - 1995**

* மேலும் விவரங்களை தினமும் காலை 9.00 மணி முதல் பி ப 2 00 மணிவரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# கலாலயா

## தொழிற் பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ் போதனா வைத்தியசாலையின் பின் வீதி)

(சி-2124)

---

**31-08-1995** ஆரம்பிக்கவிருந்த

துணைவி

## அரசடிப் பிள்ளையார் கோயில்

வருடாந்த ஆவணி

அலங்காரத் திருவிழாக்கள்

பிரச்சினை காரணமாக நடைபெற மாட்டாது என்பதை உபயகாரருக்கும் வழிபடுவோர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

-பரிபாலனசபை.

(38249)

---

# நித்திய கல்யாணி

* இந்து கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம்
* கேக் ஐசிங் * தலையலங்காரம்
* தையல்

பிரத்தியேக வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 07-09-1995 (வியாழன்)

## நித்திய கல்யாணி பயிற்சி நிலையம்

'பொன்னகம்'
தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
(பலாலி தபாற்பெட்டிச் சந்திக்கு அருகில்)


## அறை வாடகைக்கு

இங்கு - மாணவர்களுக்கான சகல வசதிகளுடனும் கூடிய அறைகளும் வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

(38260)

---

## நீங்காத நினைவுகளில்
# 1 -ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## சிவக்கொழுந்து செல்லத்துரை

தாயின் மடியில்: 19 — 05 — 1913
ஆண்டவன் அடியில்: 08 — 09 — 1994

திதி: 29 — 08 — 1995

ஓராண்டு ஓடிற்றம்மா உலகை நீ விட்டகன்று
பல்லாண்டு மறைந்தாலும் மறப்போமோ நின்-
திருவுருவை!
சீராட்டிப் பாராட்டிச் செல்வமாய் எமை-
வளர்த்தாய்
வீட்டின் தலைவியாய் விளக்கேற்றி வைத்திருந்தாய்
பாசமறுத்து பரமனடி சேர்ந்த தேனோ?
நேசம் மறப்போமோ உலகம் நிலைக்குமட்டும்?
இறைவனடி இணைந்து நிறைவுடன் நீ வாழ
நிறைமனதாய் இறைஞ்சுகிறோம் நிமலன் தாள்-
வணங்கி

கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாய் சிந்தும்
பிள்ளைகள், மைத்துனர்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்,
பூட்டி, உற்றார், உறவினர்.

இல 3 ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (38251)

---

## நெஞ்சத்தில் நீங்காத
# மூன்றாண்டு நினைவலைகள்



செல்வன்
## பாக்கியதுரை உதயகுமார்

29 - 08 - 1992 அன்று மானிப்பாயில் எதிர்பாராதவிதமாக படுகொலை செய்யப்பட்டார்.

தோற்றம்: 30 — 06 — 1970
மறைவு: 29 — 08 — 1992

அன்பால் அரவணைப்பால்
ஆற்றலுடன் இணைந்த பண்பால்
பாசமதால் உயிரால் எம்
இதயமதை கவர்ந்திழுத்தாய்- உதயா
நித்திலமே உனைப்பிரிந்த
நிறைவாண்டு மூன்றாச்சு உன்
நினைவலைகள் பெருகிவர கண்ணிரண்டும் குளமாச்சு.
இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நின் பிரிவால் துயருறும்;
பெற்றோர், சகோதரர்கள்.

கட்டுடை,
மானிப்பாய். [38257]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கிராம நிதியம் ஒரு காமதேனு

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக வெல்ல முடியாது என்பதனை சந்திரிகா அனுபவத்தில் உணர்ந்து விட்டார். அதனால் உணவுத் தடையையும், உணவு உற்பத்தித் தடையையும் இறுக்கும் நடவடிக்கையில் இப்போது முழு மூச்சுடன் இறங்கியுள்ளார்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், கிராமங்களில் மாற்றுப் பயிர்களையும், தானிய வகைகளையும் அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டிய கட்டாய தேவை ஒன்று எழுகிறது. இந்தத் தேவையை ஈடுசெய்யும் விதத்தில் விவசாயத்தில் ஈடுபடும் சக்தி கமக்காரர்களுக்கு உண்டா? அதற்கான நிதிக்கு அவர்கள் என்ன செய்வார்கள்?

இவ் வேளையில், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய நிதியம் கோடையிலே குளிர் நிழலை அள்ளி வழங்கும் தருவாக விளங்குகிறது.

கிராமப் பொருண்மிய மேம்பாட்டுக்காக கோட்ட வட்ட மட்டங்களில் இயங்குபவை கிராம உற்பத்திக் குழுக்கள். இக்குழுக்களுடன் இணைந்து செயற்படும் கிராம நிதியம் உற்பத்தியாளர்களின் காசுக் கஷ்டத்தை களைவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

கிராமப்புற உற்பத்தியாளர்கள், தொழிலாளர்களில் பெரும்பான்மையானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களே. இவர்களை சேமிப்புத் துறையில் ஊக்குவித்து அந்தப் பணத்தை அவர்களுக்கே மிக இலகுவாகப் பெறக் கூடிய கடன்களாக வழங்கி வருகிறது கிராமிய நிதியம்.

கொழும்பில் தலைமையகங்களைக் கொண்டியங்கும் வங்கிகளின் கிளைகள், தமிழீழக் கிராமங்களில் வாழும்— வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும்— மக்களின் கைகளுக்கு எட்டாமல் வெகு தொலைவில் நிற்கின்றன. விவசாயிகளுக்கோ, மீனவர்களுக்கோ, குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கோ கடன் வழங்கி உதவுவதில் அவைக்குச் சிரத்தை இல்லை; அவற்றின் கைகள் கட்டப்பட்டுள்ளன. ஆடியில் ஒன்று அமாவாசையில் ஒன்று என வழங்கப்படும் கடன்களுக்குக் கூட எக்கச்சக்கமான நிபந்தனைகள்.

இத்தகைய பின்னணியில் கிராமத்து உழைக்கும் மக்களுக்கு— உற்பத்தியாளருக்கு— கைகொடுக்கும் உற்ற தோழனாக விளங்குகிறது கிராம நிதியம். மிகக்குறைந்த தொகையை சேமிக்கத் தொடங்கும் வாடிக்கையாளர்கள் மிகச் சுலபமாகத் தமக்குத் தேவையான விவசாயப்போக வேளையில் கடனைப் பெற்றுப் பயனடைந்து உற்பத்தியைப் பெருக்க உதவுகிறது.

இன்று தமிழீழக் கிராமங்களின் உற்பத்திப் பெருக்கத்துக்கு மூலாதாரமாக விளங்குவதும் கிராம நிதியமே. தமிழீழத்தின் பொருண்மிய மேம்பாட்டுக்கு வளம் நல்கும் காமதேனுவாக அது மிளிர்கிறது.

உற்பத்தியாளர்கள் தவிர்ந்த ஏனையோரும் கிராம நிதியத்தில் — மாவீரர் சோலைத் திட்டத்திலும், தென்னஞ்சோலைத் திட்டத்திலும் — சேமித்து நாட்டின் உற்பத்தியாளருக்கு உதவுவது காலத்தின் தேவை.

# 11 இராணுவ முகாம்கள் திருமலையில் மூடப்பட்டன!

யாழ்ப்பாணம், ஒ. 29

திருகோணமலையில் உள்ள பள்ளிக்குடியிருப்பு இராணுவ முகாம் மூடப்பட்டுள்ளது.

திருகோணமலை நகரில் இருந்து 105 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பள்ளிக் குடியிருப்பு இராணுவ முகாம் முக்கிய தளமாக இதுவரை இயங்கி வந்தது.

அத்துடன் சட்டைப்பறிச்சான், திரியாய் ஆகிய முகாம்களும் மூடப்பட்டுவிட்டன.

பள்ளிக்குடியிருப்பு இராணுவத்தளத்துடன் பட்டியடி, பூநகர், 49 ஆம் கட்டை, 64 ஆம் கட்டை, வெருகல், கற்குழி, ஈச்சிலம்பற்றை, நாவலடிச் சந்தி ஆகிய 11 இராணுவ முகாம்கள் இம்மாதத்தில் திருகோணமலையில் மூடப்பட்டுள்ளன.

இந்த முகாம்கள் மூடப்பட்டதை அடுத்து திருமலை மூதூர் பிராந்தியத்தின் தென் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. (ஐ-3)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒ. 29

நேற்று முன்தினம் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் லெப்டினன்ட் அக்காச்சி அல்லது அப்துல்லா (செல்வரத்தினம் குமாரசீலன்- யாழ்ப்பாணம்), 2 ஆம் லெப்டினன்ட் தில்லைநாதன் (நல்லதம்பி நகுலேஸ்வரன்- யாழ்ப்பாணம்) ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்தனர். (ஐ-3)

## காசுக் கொடுப்பனவு பெறும் மேலும் நான்கு பேர் விவரம்

கீழ் குறிப்பிட்டுள்ளோருக்கான ஒருதொகைக் காசு தங்களால் வழங்கப்பட இருப்பதாக நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கன்னாதிட்டியில் உள்ள தமிழீழ வைப்பகத்துக்கு அடையாள ஆவணங்களுடன் சென்று இவர்கள் தமது காசினைப் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ க. நவரத்தினம் அல்லது திருமதி நவரத்தினம், — தொல்புரம் மத்தி, சுழிபுரம்.

★ இ. கிருஸ்ணதுரை, — மெயின் றோட், பண்ணாகம் சுழிபுரம்.

★ சின்னையா சொக்கலிங்கம், கல்வளை வீதி, சண்டிலிப்பாய்.

★ குணபாலசிங்கம் அல்லது குமாரசாமி அல்லது சாந்தா — சுதுமலை மேற்கு, மானிப்பாய்.

# கொழும்பு மர்மக் கொலைகளில் புலனாய்வுப் பிரிவினரும் சம்பந்தம்

## ஆட்களைக் கொலை நச்சுவாயு பாவிப்பு

தெற்கில் ஆறுகளில் இருந்து சடலங்கள் மீட்கப்பட்ட விவகாரம் குறித்து விசாரணை செய்த பொலீஸார் இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்த சிலரையும் கைது செய்துள்ளனர்.

இது குறித்து விசாரணை செய்து வரும் பொலீஸார் விசேட அதிரடிப்படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் உட்பட 35 பேரைக் கைது செய்து நாலாம் மாடியில் வைத்து விசாரித்து வருகின்றனர்.

இது தொடர்பாக இதுவரை ஜீப், டிரக், 3 ஓட்டோக்கள், இரு டபிள்கப் வாகனங்கள், இரு வான்கள் ஆகியவற்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை கொல்ல நச்சுவாயு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்—

அந்த நச்சுவாயு இஸ்ரேலில் இருந்து கொண்டு வரப்பட்டிருந்தது என்றும்— விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்

கடத்திச் சென்று கொல்லப்பட்ட வடபகுதி இளைஞன் ஒருவனின் மோதிரத்தை அதிரடிப்படை இன்ஸ்பெக்டர் ஒருவர் தனது விரலில் அணிந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரபாவை நாடுகடத்துமாறு மீண்டும் நெருக்குதல் வரும்

புதுடில்லி, ஒ. 29

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், பொட்டு அம்மானையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் இந்திய அரசு மீண்டும் கடுமையான தொனியில் வேண்டுகோள் விடுக்க இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அரசின் இந்த வேண்டுகோள் இன்னும் இரு வாரங்களுக்குள் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசாங்கத்திடம் தெரிவிக்கப்படும் என்றும் —

இது தொடர்பாக உயர்நிலை அதிகாரி ஒருவர் கொழும்புக்கு அனுப்பப்பட இருப்பதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும், பொட்டுஅம்மானையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசு ஏற்கனவே மூன்று முறை இலங்கையிடம் உத்தியோக பூர்வமாக வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஆனால் அந்த வேண்டுகோளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசு கொண்டுள்ள அசமந்தப் போக்கை இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முஹார்ஜி கண்டித்துள்ளார்.

''ஏசியன் ஏஜ்'' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே கடும் தொனியில் அவர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

# மீனவர்கள் ஐந்து பேர் நேற்று புலிகளால் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 29

விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த ஐந்து மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பருத்தித்துறையில் வைத்து அவர்களைப் பொறுப்பேற்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் அவர்களை உடனடியாகவே 'ஹரண' கப்பலில் திருகோணமலைக்கு அனுப்பி வைத்தனர். (ஐ-8)

## பாடசாலைகள் மீண்டும் ஆரம்பம்

# மாணவர், ஆசிரியரை சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 29

அளவெட்டி, மல்லாகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் நேற்று முதல் மூன்றாம் தவணைக்காக மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

எனவே சகல மாணவர்களும், ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு சமுகமளிக்க வேண்டும் என்று யாழ். கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமி அறிவித்துள்ளார்.

மூன்றாம் தவணைக்குரிய செயற்திட்டங்களையும், இரண்டாம் தவணைக்கான பல செயற்பாடுகளையும் உடன் ஆரம்பிக்க வேண்டியிருப்பதால் அனைவரும் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுமுறையின் பின் நேற்று பாடசாலைகள் ஆரம்பமானபோதும் மாணவர் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டது. [ஐ]

## ராஜீவ் - ஜே. ஆர். —

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கையான இணைந்த வடக்கு-கிழக்கு மற்றும் தமிழர் தாயகம் என்ற கருத்துக்கு மாறானது.

எல்லைகள் மீள நிர்ணயம் செய்யப்படும்போது அம்பாறை மற்றும் மட்டக்களப்பின் ஒரு பகுதி முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு பிராந்தியமாக மாறும். திருகோணமலை, மட்டக்களப்பின் எஞ்சிய பகுதிகள் மற்றும் வட மத்திய மாகாணத்தின் கிழக்குப் பகுதி என்பன அங்கு வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்களின் அடிப்படையில் பிராந்தியங்களாக்கப்படும். இது புலிகளுக்கு ஏற்புடைய ஒரு செயலாக இருக்காது.

மத்திய அரசில் தமிழர்களின் பங்கு மற்றும் தமிழ் மொழி ஆகிய விடயங்களில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் அகற்றப்படும் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை.

அத்துடன் இலங்கையின் தேசிய சிவில் சேவை, இராணுவம், பொலிஸ் சேவை என்பவற்றுக்கு விகிதாசார அடிப்படையில் தமிழர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா என்பதும் தெரியவில்லை.

இவ்வாறு டிக்ஸிட் மேலும் தெரிவித்துள்ளார் (இ)

## சந்திரிகாவின் தீர்வு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் வெளியிட்டிருந்தார் அல்லவா?

அதனைத் தொடர்ந்து சுதந்திரக்கட்சி இரு துருவப்படத் தொடங்கியுள்ளது. தீர்வு யோசனைக்கு எதிரான சுதந்திரக்கட்சி எம். பிக்கள் ரத்வத்தையின் பக்கம் அணி சேரத் தொடங்கியுள்ளனர். இதனால் சுதந்திரக்கட்சி பிளவுபடும் ஆபத்து உருவாகக்கூடும்.

இதே வேளை பௌத்த குருமார்களும் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

முன்னர் வெளிப்படுத்திய தீர்வு யோசனை முக்கிய அம்சங்களைத் திருத்த அரசு முடிவு செய்யும் பட்சத்தில் தமிழ்க் கட்சிகளின் ஆதரவு கிடைக்காது.

இதனால் அரசு பெரும் இக்கட்டான நிலைக்குள் சிக்கியிருக்கிறது — என்று அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## உணவுக் கப்பல்களுக்கு..

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளுக்கு அமைய உணவுக் கப்பல்களை அனுப்புவதற்கு அரசு இணங்கியதை அடுத்து செஞ்சிலுவை தனது பாதுகாப்புப் பணியை மீண்டும் செய்வதற்கு முன்வந்துள்ளது.

இது குறித்து கொழும்பில் செ. ச. சர்வதேசக்குழு அலுவலகம் உத்தியோகபூர்வமாக நேற்று மாலை அறிவித்தது.

கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் இருந்த முட்டுக்கட்டை நீங்கியதைத் தொடர்ந்து —

இன்னும் நான்கு வாரங்களில் மொத்தம் 8,000 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அரச தரப்பில் நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

'லங்கா கல்யாணி' 2 ஆயிரத்து 200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களுடன் இன்று வடக்கு நோக்கி புறப்படும்

இக்கப்பல் எதிர்வரும் 2ஆம் திகதி பருத்தித்துறையில் பொருள்களை இறக்க ஆரம்பிக்கும்.

'மாஹோ' கப்பல் 6 ஆயிரத்து 900 பரல் மண்ணெண்ணெய் மற்றும் ஆயிரம் மெற்றிக் தொன் பாவனைப் பொருள்களுடன் நாளை புறப்படும். இந்தக் கப்பல் 2ஆம் திகதி பருத்தித்துறையில் பொருள்களை இறக்க ஆரம்பிக்கும்.

'ஹெந்தல' கப்பல் 1,950 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக் கொண்டு அடுத்த மாதம் 2 ஆம் திகதி பருத்தித்துறை வரும்—என்று அரச தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது. [அ-5]

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்
கொண்டிருக்கும்

## "வேரும் விழுதுகளும்"

கல்வியியற் கண்காட்சி

**மீண்டும் 30ஆம் திகதி ஆரம்பமாகிறது**

இடம்: நுணாவில் கண்ணகை அம்மன் கோவிலடி

நிகழ்வு நேரம்;
காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகிறது.
உள் அனுமதிக்கப்படும் இறுதி நேரம் மாலை 5-30 மணி

**எங்களைத்தேடி.....செல்வோமா?**

— செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்.

(38253)

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி சோமசேகரம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

வல்வெட்டித்துறை ஆ. மி. பாடசாலை ஒழுங்கையைச் சேர்ந்த இளைப்பாறிய தபால் அதிபர் கந்தசாமி சோமசேகரம் 27-08-1995 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஹலோக் கந்தசாமி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற செல்லமாணிக்கம் மணியம் தம்பதிகளின் மருமகனும், சாந்தகுணேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி. நீ. லக்சுமிதேவி, காலஞ்சென்ற மகாலக்சுமி, திருமதி. வா. அல்ஜலக்சுமி, ஏகாந்தன், கிருத்திகலக்சுமி(3ஆம் வருட கலைப் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நீதிராஜா, வாமதேவன் ஆகியோரின் மாமனும், சபேசன், வர்ணன், வாகீஷன், நிதர்ஷனா. நிரோஜன், நிலானியா, பிரணவன் ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 28-08-1995 இல் ஊறணி மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,

ஆ. மி. பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(38261]

## சின்னையா சண்முகம்

சின்னையா சண்முகம் (ஓய்வுபெற்ற கணக்காய்வாளர் புகையிரதத்திணைக்களம்) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சின்னையா— லட்சுமி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கார்த்திகேசு (மலேசியா), மாணிக்கம்மா ஆகியோரின் பாசமிகு தம்பியும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், புஷ்பநாதன், (இங்கிலாந்து) இராஜேஸ்வரி, லோகேஸ்வரி, (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், இராமச்சந்திரன் (பொறியியலாளர்) விஜயா (இங்கிலாந்து), ஜெயக்குமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், இரஜந்தி, இரமாவித்யா, இராகுலன் றோஜினி, நிலானி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற தில்லையம்பலம் நாகமுத்துவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 29-08-95 செவ்வாய் பி. ப. 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இராஜேஸ்வரி
[மகள்]

47, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்.

[38267]

## திருமதி இராணி சத்தியதாசன்

(பட்டதாரி ஆசிரியை- கீரிமலை - நகுலேஸ்வரா ம. வி. மாதகல் சென்ற் யோசப் மகா வித்தியாலயம்)

கீரிமலையைப் பிறப்பிடமாகவும், 8 ஆம் கட்டை ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராணி சத்தியதாசன் நேற்று 28 - 8 - 95 காலமானார்.

இவர் காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பு சத்தியதாசன் (லங்கா சிமெந்து லிமிடெட்) அவர்களின் அருமை மனைவியும், சுதர்சா, சுதர்சனன், நிதர்சா, சபேசா, கிருஷ்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், சதிரவேல், திருமதிகள் தெய்வானை, வள்ளிப்பிள்ளை, சௌரியம்மா, தேவி, செல்லப்பா ஆகியோரின் இளைய சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று 29 - 8 - 95 பிற்பகல் 2 மணிக்கு 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டையில் நடைபெற்று பூதவுடல் கரையாம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு த. பாலகுமாரநாதன்
திருமதி. கி.கா. பாலகுமாரநாதன்
(சுட்டா - இலங்கை வங்கி, காங்கேசன் துறை)

3 ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

(38269)

## காவலரண்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்.

காவலரணில் இருந்த ஏனையோர் தப்பி ஓடினர்.

எதுவித இழப்பும் இன்றி 6 நிமிடநேரத்தில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் —

ஏ. கே. ரகதுப்பாக்கி — 2, அதற்குரிய ரவைக்கூடு —6, நடுத்தர ரவைகள் — 30, கைக்குண்டுகள் — 3, தொலைத் தொடர்பு சாதனம் — 1 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மன்னாரிக்தீவையும், தள்ளாடி இராணுவ முகாமையும் இணைக்கும் பிரதான வீதியில் கறிச்சட்டிப்பாலம் அமைந்துள்ளது. [ஐ-3]

## ஈழத் தமிழ்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். குடாநாட்டு மக்களின் அவல வாழ்க்கை குறித்து கொழும்பில் இருக்கும்போது கேள்விப்பட்டேன். இங்கு வந்ததும் அவற்றை நேரில் பார்க்கமுடிந்தது.

இங்கு பல்துறை சார்ந்தவர்களுடனும் நடத்திய கலந்துரையாடல்களில் இருந்து மக்களின் அவலநிலையை என்னால் உணரமுடிந்தது.

அவர்கள் பெரும் அபாய நிலையில் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருப்பதைக் காண முடிந்தது.

கொழும்பு திரும்பியதும் இது குறித்து ஐ. நா. சபைக்கு அறிக்கை சமர்ப்பிப்பேன்.

தமிழர்களது பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு தேவை என்பதை எனது அறிக்கையில் சிபார்சு செய்வேன்.

அத்துடன் வெளிநாட்டு தூதரகங்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றுக்கும் அறிக்கைகளை அனுப்பவுள்ளேன் — என்று தெரிவித்தார்.

குடாநாட்டு மக்களுக்கு அரசாங்கம் உணவு அனுப்பாவிட்டால் ஐ. நா உணவு அனுப்பும் சாத்தியம் இருக்கின்றதா என்று அவரிடம் கேட்டபோது —

இது விடயத்தில் அரசாங்கம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவுடன் பேச்சு நடத்தி ஓர் இணக்கத்துக்கு வந்து விரைவில் உணவு அனுப்பும் என்றே நம்புகிறேன் —

அவ்வாறான நிலை ஏற்படாத பட்சத்தில் உணவு அனுப்புவது குறித்து ஐ. நா மட்டத்தில் ஆலோசிக்கப்படலாம் — என்று றோலண்ட் ஹட்சன் பதிலளித்தார்.

(ஐ-8)

# மரண அறிவித்தல்

## தம்பிப்பிள்ளை சபாரத்தினம்

[ஆச்சாரியார்]

மாவிட்டபுரம் மதவடியைப் பிறப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சபாரத்தினம் நேற்றுக் காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயபாலன் (சுவிஸ்), ஜெயசாந்தன் (ஜேர்மனி), ஜெயகுமார் [ஜேர்மனி], ஜெயமணி (சுவிஸ்), புனிதவதி, ஜெயரஞ்சினி, ஜெயமதி ஆகியோரின் அன்பு தந்தையுமாவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் இன்று பி.ப. 2 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
வி. தபோதரன்

மின்சார நிலைய குவாட்டர்ஸ்,
சுன்னாகம்.

(38274)

உதயன் வெளியீட்டகத்தின் ஆதரவில்
யாழ். மிட் - ரவுண் றோட்டரக்ற் கழகம்
நடத்தும்

## கோலப் போட்டி

விண்ணப்ப முடிவு திகதி 30.8.95 ஆம் திகதியிலிருந்து 4.9.95 க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

உ
வண் / கிழக்கு

எச்சாட்டி மகா மாரியம்மன் ஆலய

## மண்டலாபிஷேக பூர்த்தி (1008) சங்காபிஷேகம்

மேற்படி சங்காபிஷேகம் இன்று(29 - 08 - 95) செவ்வாய் காலை 7-30 மணிக்கு ஆரம்பமாகி மதியம் மகேஸ்வரபூசை (அன்னதானம்) நடைபெறும்.

பிற்பகல் 5-30 மணிக்கு வசந்தமண்டப பூசை ஆரம்பமாகி பிள்ளையார், முருகன் சமேத அம்பாள் வீதி உலா வருவா என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்:
க. இராஜேந்திரம் குடும்பத்தினர்.
(வைரமுத்து மாமா)
விழா உபயகாரர்.

[38266]

யாழ்ப்பாணம் - வை. எம். சி. ஏ

## பயிற்சி நெறிகள்

தட்டெழுத்து - ஆங்கிலத்திலும், தமிழிலும்
சுருக்கெழுத்து - ஆங்கிலத்திலும், தமிழிலும்

மேற்கண்ட பயிற்சி நெறிகள் 11 - 09 - 1995 இல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு 07 - 09 - 1995 இற்கு முன்னர் நேரடியாகப் பதிவு செய்து கொள்ளவும்.

பொதுச்செயலாளர்,
வை. எம். சி. ஏ.
யாழ்ப்பாணம்.

(சி-2125)

# மரண அறிவித்தல்கள்

## செல்வரட்ணம் - குமரசீலன்

(அக்காச்சி - அப்துல்லா)

கரெழு மேற்கைச் சேர்ந்த செல்வரட்ணம் - குமரசீலன் 27 - 08 - 1995 இல் வீரமரணம் எய்தியுள்ளார். இவர் காலஞ்சென்ற செல்வரட்ணம் (சீனித்தம்பி) — நாகேஸ்வரியின் அன்பு மகனும், பதிமசீலன் (ஜேர்மனி), செல்வசீலன் (ஜேர்மனி), குணசீலன்(ஜேர்மனி), வனிதா (லண்டன்), பத்மசோதி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் மரணச்சடங்கு ஐயனார் கோவிலடி கொக்குவில் மேற்கில் நடைபெறும்.

தகவல்:
ந. புஸ்பராசா
(சகோதரர்)

மைத்துனர்,
சி. சச்சிதானந்தம் (சச்சி)
ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.

[38275]

## கந்தசாமி சிவமயம்

[ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்]

பண்ணாகம் தெற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த கந்தசாமி சிவமயம் நேற்றுக் காலமானார். இவர் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தயாளினி, சுதர்சினி, மோகினாள் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு திருவடிநிலை மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

குமரகிரி,
பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.

[38273]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் தாவளி வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.